**செ. கு. எண்: 204** **நாள் : 26.12.2015**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 26.12.2015

திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், மேல உத்திர வீதியில் கட்டடப் பணி நடைபெற்றுக் கொண்டிருந்த வீட்டினருகே 23.12.2015 அன்று மற்றொரு வீட்டின் சுவர் திடீரென இடிந்து விழுந்ததில், கட்டடப் பணியில் ஈடுபட்டிருந்த மண்ணச்சநல்லூர் பகுதியைச் சேர்ந்த திரு. நல்லதம்பி என்பவரின் மகன் கோபி, திரு. பெருமாள் என்பவரின் மகன் லட்சுமணன், ஸ்ரீரங்கத்தைச் சேர்ந்த திரு. பாலசுப்பிரமணியன் என்பவரின் மகன் ரமேஷ், தென்னூர் கிராமத்தைச் சேர்ந்த திரு மோகன் என்பவரின் மகன் திரு. ரங்கநாதன் ஆகியோர் பலத்த காயமடைந்து உயிரிழந்தனர் என்றும், ஆறு நபர்கள் பலத்த காயமடைந்துள்ளனர் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் வருத்தம் அடைந்தேன்.

இந்த விபத்தில் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வரும் இவர்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்க மருத்துவமனை அதிகாரிகளுக்கும், திருச்சிராப்பள்ளி மாவட்ட நிருவாகத்திற்கும் நான் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் குடும்பங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 50,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**